பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

14 12 2024 — 6 30
சனிக்கிழமை — மாலை

தலைப்புச் செய்திகள் -

1. காலங்களைக் கடந்த இந்திய அரசியலமைப்புச் சட்டம் வலிமையுடன் திகழ்வதாக பிரதமர் திரு நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.
2. தென்மாவட்டங்களில் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை ஆய்வு செய்து உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.
3. திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர், கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.,
4. காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், சட்டப்பேரவை உறுப்பினருமான ஈ வி கே எஸ் இளங்கோவன் மறைவுக்கு தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனா.
5. ஒடிஸா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரித்விக் சஞ்சிவி, தன்வீ சர்மா ஆகியோர் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

காலங்களைக் கடந்த இந்திய அரசியலமைப்புச் சட்டம் வலிமையுடன் திகழ்வதாக பிரதமர் திரு நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் அரசியல் சாசனம் தொடர்பாக நேற்றும் இன்றும் நடைபெற்ற சிறப்பு விவாததிற்கு பிரதமர் இன்று பதிலளித்து பேசினார்.

அரசியல் சாசனத்தையும், ஜனநாயகத்தையும் கொண்டாட வேண்டிய தருணம் இது என்று அவர் கூறினார்.

அரசியல் சாசனத்தை வடிவமைத்ததில் பெண்கள் முக்கிய பங்காற்றி உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அரசியல் சாசனம் 75 ஆண்டுகளாக நாட்டை முன்னேற்றப்பாதையில் வழி நடத்தி வந்துள்ளதாக அவர் கூறினார்.

முன்னதாக இந்த விவாதத்தில் பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, நம்பிக்கை, முயற்சி என்ற தாரக மந்திரத்துடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

நாடு சுதந்திரம் பெற்ற பின் அனைவருக்கும் சம உரிமை கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நாட்டில் சிறுபான்மையினர் சட்டப்பூர்வமான பாதுகாப்பை பெற்றுள்ளதாக தெரிவித்த அவர், சிறுபான்மையினர் நலனுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களையும் எடுத்துரைத்தார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு கிரிண் ரிஜிஜூ தெரிவித்தார்.

இந்த விவாதத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, நாட்டில் வேலைவாய்ப்பின்மை, பெண்கள் மற்றும் விவசாயிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

நாட்டின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார சமத்துவம் குறைந்து வருவதாக திரு ராகுல்காந்தி கூறினார்.

இந்த இரண்டு நாள் விவாதத்தில் பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் பங்கேற்று தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

**[]<<<>>>[]**

தென்மாவட்டங்களில் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை ஆய்வு செய்து உரிய நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

தென்மாவட்டங்களில் பெய்த வரும் கனமழை மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அவர் இன்று சென்னையில் ஆய்வு மேற்கொண்டார்.

அணைகளின் நீர் இருப்பை கண்காணிக்குமாறும், உபரி நீரை திறந்து விடும்போது உரிய முன்னெச்சரிக்கை விடுக்க வேண்டுமென்றும் அவர் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண பணிகள் குறித்தும் அவர் கேட்டறிந்தார்.

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க வேண்டுமென்றும், அவர்களுக்குப் போதிய அடிப்படை வசதிகள் மற்றும் சுகாதார வசதிகளை செய்து தருமாறும் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை உறுப்பினருமான திரு ஈ வி கே எஸ் இளங்கோவன், உடல்நலக் குறைவு காரணமாக இன்று சென்னையில் காலமானார். அவருக்கு வயது 75.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும், மத்திய அமைச்சராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

ஈ வி கே எஸ் இளங்கோவன் மறைவுக்கு காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, மத்திய இணை அமைச்சர் திரு

எல் முருகன், முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் பலர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

சென்னை மணப்பாக்கத்தில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள இளங்கோவன் உடலுக்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் நேரில் அஞ்சலி செலுத்தினார்.,

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், ஈ வி கே எஸ் இளங்கோவனின் மறைவு அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் தமக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி,

ம தி மு க பொதுச்செயலாள் திரு வைகோ, பா ம க நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு தொல் திருமாவளவன் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நாளை காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாகவம் அவர் கூறினார்.

<u>*( சவுண்ட்பைட் - பாலச்சந்திரன் ) --- 54 செகண்ட்*</u>

இதனிடையே தென்மாவட்டங்களில் பரவலாக நல்ல மழை பெய்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக பல பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளதாகவும், ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - லஷ்மணன் ) --- 33 செகண்ட்*

தென்காசி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருவதையடுத்து அம்மாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.,

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகளில் ஈடுபட்டு வரும் வரும் தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழுவினரை மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் சந்தித்து மீட்புப் பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

வெள்ள நீரால் சூழப்பட்ட பகுதிகளையும் அவர் நேரில் பார்வையிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்துத்துறை அதிகாரிகளுடன் திரு ராமச்சந்திரன் ஆலோசனை மேற்கொண்டார்.

தேனி மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் மலைப்பகுதியையொட்டி உள்ள சாலைகளில் மக்கள் இரவு நேர பயணத்தை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையை அடுத்து சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களான பூண்டி, புழல், செம்பாக்கம் ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதனையடுத்து இந்த ஏரிகளிலிருந்து உபரிநீர் திறந்துவிடப்படுவது அதிகரிக்கப்பட்டுள்ளதால் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - தனசேகர் ) --33--- செகண்ட்*

இந்நிலையில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் நீர் இன்று பிற்பகல் முதல் வினாடிக்கு ஆறாயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சிறுகளத்தூர், காவனூர், குன்றத்தூர், திருமுடிவாக்கம், வழுதியம்பேடு, திருநீர்மலை மற்றும் அடையாறு ஆற்றின் இருபுறமும் வசிக்கும் மக்கள் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**[]<<<>>>[]**

திருவண்ணாமலை அண்ணாமலையார் மலையில் மண் சரிவு ஏற்பட்ட இடத்தை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு எஸ் எஸ் சுந்தர் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டம் உதகை படகு இல்லத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகளை மாநில அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் இன்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோவில் கார்த்திகை கடைஞாயிறு பெருவிழாவையொட்டி இன்று தேரோட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

**[]<<<>>>[]**

நாமக்கல்லில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் சித்த மருத்துவ முகாம் மற்றும் மூலிகை கண்காட்சி இன்று நடைபெற்றது.,

**[]<<<>>>[]**

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் தூய்மைப் பணியாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

காஞ்சிபுரம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் லோக் அதாலத் எனும் மக்கள் நீதிமன்றம் இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

ஒடிசா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரித்விக் சஞ்சிவி, தன்வீ சர்மா ஆகியோர் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் ரித்விக் சஞ்ஜிவி 21-17, 21-14 என்ற செட் கணக்கில் தாய்லாந்து வீரரை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் தன்வீ சர்மா 21-19, 21-19 என்ற நேர் செட்களில் சக வீராங்கனை ஸ்ரீயான்ஷி வாளிஷெட்டியை வென்றார்.

**[]<<<>>>[]**

சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ரஷ்மிகா இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

***End of News***